## வகுப்பு-7 - பருவம்-2 - வரலாறு, 1. விஜயநகர, பாமினி அரசுகள்

**பயிற்சி வினாக்கள்:**

1. பாமினி அரசு _______ மாநிலம் முழுவதும் பரவி இருந்தது.

   1. கர்நாடகா 2. மஹாராஷ்டிரா 3. கேரளா 4. தமிழ்நாடு

2. பாமினி அரசு _______ ஆண்டுகள் பதினெட்டு முடியரசர்களால் ஆளப்பட்டது.

   1. 25 2. 18 3. 100 4. 180

3. விஜயநகர அரசு வலுவான அரசாக _______ ஆண்டுகள் ஆட்சி செய்தது.

   1. 200 2. 150 3. 100 4. 250

4. _______ ல் நிகழ்ந்த தலைக்கோட்டைப் போர் விஜயநகர அரசை விழ்த்தியது

   1. 1945 2. 1564 3. 1654 4. 1565

5. வெற்றியின் நகரம் என்றழைக்கப்படுவது _______.

   1. அகமது நகர் 2. குல்பர்கா 3. பாமினி 4. விஜயநகரம்

6. வித்யாநகர் என அழைக்கப்பட்ட நகரம் _______.

   1. அகமது நகர் 2. குல்பர்கா 3. பாமினி 4. விஜயநகரம்

7. சிருங்கேரி சைவ மடத்தின் தலைவர் _______.

   1. வித்யாரண்யர் 2. புக்கர்

   3. ஹரிஹரர் 4. கிருஷ்ணதேவராயர்

8. விஜயநகரம் _______ சகோதரர்களால் கர்நாடகத்தின் தென் பகுதியில் நிறுவப்பட்டது.

   1. ஹரிஹரர் - புக்கர் 2. வித்யாரண்யர் - ஹரிஹரர்

   3. கிருஷ்ணதேவராயர் - புக்கர் 4. கிருஷ்ணதேவராயர் - வித்யாரண்யர்

9. பொருத்துக

LIVEWORKSHEETS

i. சங்கம மரபு - a. 1570 - 1646

ii. சாளுவ மரபு - b. 1505 - 1570

iii. துளுவ மரபு - c. 1336 - 1485

iv. ஆரவீடு மரபு - d. 1485 - 1505

1. i - a, ii- b, iii- d, iv - c    2. i - c, ii- d, iii- b, iv - a

3. i - c, ii- b, iii- d, iv - a    4.i - d, ii- a, iii- b, iv - c

10. சங்கம வம்சத்தின் மிகச்சிறந்த ஆட்சியாளர் _______.

1. புக்கர்    2. தேவராயர்-II    3. ஹரிஹரர் - II    4. கிருஷ்ணதேவராயர்

11. பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் விஜயநகரப் பேரரசு _______ சுல்தானியங்களாகப் பிரிந்தது.

1.இரண்டு    2. மூன்று    3. நான்கு    4.ஐந்து

12. விஜயநகர அரசு உருவாகிய _______ ஆண்டுகளுக்குப் பின்னரே பாமினி அரசு நிறுவப்பட்டது.

1. 10    2. 15    3. 8    4. 13

13. குமார கம்பணாவின் மனைவி கங்காதேவியால் எழுதப்பட்ட நூல் _______.

1. குமாரகாண்டம்    2. மதுரா விஜயம்

3. அமுக்தமால்யதா    4. ஜாம்பவதி கல்யாணம்

14. மதுரா விஜயம் எனும் நூல் _______ கைப்பற்றப்பட்டதை விளக்குகிறது.

1. விஜயநகரம்    2. பாமினி    3. மதுரை    4. ஹம்பி

15. இரண்டாம் ஹரிஹரர் பாமினி அரசிடமிருந்து _______ ஆகிய பகுதிகளைக் கைப்பற்றினார்.

1. பீஜப்பூர், கோவா    2. பெல்காம், கோவா

3. பெல்காம், பீஜப்பூர்    4. பீஜப்பூர், ரெய்ச்சூர்

LIVEWORKSHEETS

16. _______ வம்சத்தின் தலைசிறந்த அரசர் இரண்டாம் தேவராயர்.

1. சாளுவ 2. துளுவ 3. ஆரவீடு 4. சங்கம

17. சங்கம வம்சத்தின் கடைசி அரசர் யார்?

1. ராமராயர் 2. திருமலை தேவராயர்
3. இரண்டாம் தேவராயர் 4. இரண்டாம் விருபாக்சிராயர்

18. கூற்றைக் காரணத்தோடு பொருத்துக:

கூற்று: இரண்டாம் தேவராயர் சங்கம வம்சத்தின் தலைசிறந்த அரசராவார்.

காரணம் : இரண்டாம் தேவராயர் தம்முடைய படைகளுக்கு நவீனப் போர் முறை பயிற்சி அளிக்க இஸ்லாமிய வீரர்களை பணியமர்த்தினார்.

1. கூற்று சரி, காரணம் தவறு 2. கூற்று தவறு, காரணம் தவறு
3. கூற்று மற்றும் காரணம் தவறு 4. கூற்று மற்றும் காரணம் சரி

19. முதலாம் தேவராயர் _______ சேர்ந்த கஜபதி வம்ச அரசர்களை தோற்கடித்தார்.

1. கர்நாடகா 2. மஹாராஷ்டிரா 3. ஒடிசா 4. குஜராத்

20. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.

1. முதலாம் தேவராயருக்குப் பின்னர், விஜயநகர பேரரசு ஆபத்தான சூழலுக்கு உள்ளானது.
2. சாளுவ நரசிம்மர் சங்கம வம்சத்தின் முதல் அரசரான இரண்டாம் விருபாக்சிராயரைக் கொலை செய்துவிட்டு, தம்மையே பேரரசராக அறிவித்துக் கொண்டார்.
3. நரசநாயக்கர் சங்கம வம்சத்தின் முதல் அரசரான இரண்டாம் விருபாக்சிராயரைக் கொலை செய்துவிட்டு, தம்மையே பேரரசராக அறிவித்துக் கொண்டார்.
4. நரசநாயக்கர் மரணத்துடன் துளுவ வம்சம் முடிவுக்கு வந்தது

21. இரண்டாம் விருப்பாக்சிராயர் _______ வம்சத்தின் கடைசி அரசர் ஆவார்.

LIVEWORKSHEETS

1. சாளுவ 2. துளுவ 3. ஆரவீடு 4. சங்கம

22. சாளுவ வம்சத்தின் முடிவுக்கு பிறகு நரசநாயக்கர் ______ வம்சத்தின் ஆட்சியைத் தொடங்கி வைத்தார்.

1. சாளுவ 2. துளுவ 3. ஆரவீடு 4. சங்கம

23. கிருஷ்ண தேவராயர் ______ ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்.

1. 20 2. 15 3. 14 4. 25

24. திறமை மிகுந்த படைத் தளபதியான ______ அரியணையைக் கைப்பற்றித் துளுவ வம்சத்தின் ஆட்சியைத் தொடங்கி வைத்தார்.

1. நரசநாயக்கர் 2. கிருஷ்ணதேவராயர்
3. புக்கர் 4 .ஹரிஹரர்

25. துளுவ வம்ச அரசர்களுள் மிகவும் போற்றதலுக்கு உரியவர் ______

1. கிருஷ்ணதேவராயர் 2. முதலாம் தேவராயர்
3. இரண்டாம் தேவராயர் 4. திருமலை தேவராயர்

26. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க.

I. பச்சைக்கலந்த நீலவண்ணத்தைக் கொண்ட விலையுயர்ந்த கற்களால் ஆன அரியணை பாரசீக அரசர்களின் அரசவையை அலங்கரித்தன என பிர்தௌசி தன்னுடய ஷா நாமா எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

II. விஜயநகர, பாமினி அரசர்களுக்கிடையே மோதல்கள் ஏற்படுவதற்கு கிருஷ்ணா- துங்கபத்ரா நதிகளுக்கு இடைப்பட்ட செழிப்பான பகுதி மற்றும் கிருஷ்ணா- கோதாவரி நதிகளுக்கு இடைப்பட்ட கழிமுகப் பகுதியே காரணமாக அமைந்தன.

III. முதலாம் முகமது முல்தானில் கல்வி பயின்றார்.

IV. முகமது கவான் மூன்றாம் முகமதுவின் கீழ் தனித்தன்மை மிக்க பிரதம அமைச்சராக பணியாற்றினார்.

1. I மற்றும் II சரி 2. I, II மற்றும் III சரி

LIVEWORKSHEETS

3. I, II மற்றும் IV சரி 4. III மற்றும் IV சரி

27. கிருஷ்ண தேவராயர் ஒடிசாவை சேர்ந்த _______ வம்ச அரசர் பிரதாப ருத்திரனோடு போர் புரிந்தார்.

1. சாளுவ 2. துளுவ 3. ஆரவீடு 4. கஜபதி

28. கிருஷ்ண தேவராயர் _______ பீரங்கிப்படை உதவியுடன் கோல்கொண்டா சுல்தானை தோற்கடித்தார் பின் பீஜப்பூர் சுல்தானிடமிருந்து ரெய்ச்சூரைக் கைப்பற்றினர்

1. ஆங்கிலேயர் 2. முகலாயர் 3. போர்ச்சுகீசியர் 4. ஐரோப்பியர்

29. _______ ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் துங்கபத்ரா நதிப்பள்ளத்தாக்குப் பகுதியில் சுதந்திரமாகச் செயல்பட்டு வந்த தலைவர்களை அடக்குவதே அவரின் முதற்கட்ட தலையாயப் பணியாக இருந்தது.

1. ஹரிஹரர் 2. கிருஷ்ண தேவராயர்

3. புக்கர் 4. நரசநாயக்கர்

30. பொருந்தாதைக் கண்டுபிடி.

1. இரண்டாம் தேவராயர் 2. கிருஷ்ண தேவராயர்

3. கிருஷ்ணசாமி கோவில் 4. ராமசாமி கோவில்

31. பாமினி சுல்தான் முகமதுஷாவை, மீண்டும் அரியணையில் அமர வைத்தவர்

1. ஹரிஹரர் 2. கிருஷ்ண தேவராயர்

3. புக்கர் 4. நரசநாயக்கர்

32. _______ போரில் விஜயநகரம் தோற்கடிக்கப்பட்டது.

1. பக்சார் போர் 2. தலைக்கோட்டை போர்

3. பாமினி போர் 4. முதல் விஜயநகர போர்

33. சரியான கூற்றை தேர்வு செய்:

LIVEWORKSHEETS

1. மழை நீரை சேமிப்பதற்காக நீர்ப்பாசனக் குளங்களையும், நீர்த்தேக்கங்களையும் உருவாக்கியவர் இரண்டாம் தேவராயர்.

2. ராயகோபுரம் என்பது கோட்டைகளின் நுழைவாயில்களில் கோபுரங்களை கட்டுவது ஆகும்.

3. கிருஷ்ண தேவராயர் மேற்கு கடற்கரையிலுள்ள கப்பல்கள் மூலம் அரேபியாவிலிருந்தும், ஈரானிலிருந்தும் குதிரைகளை விஜய நகர துறைமுகத்திற்கு கொண்டுவந்தார்.

4. கிருஷ்ணதேவராயர் தலைநகரான ஒடிசாவில் கிருஷ்ணசாமி கோவில், ஹசாரா ராமசாமி கோவில், விட்டலாசுவாமி கோவில் போன்ற புகழ்பெற்ற கோவில்களைக் கட்டினார்.

34. எட்டு இலக்கிய மேதைகள் _______ என்று அழைக்கப்பட்டனர்.

1. அஷ்டதிக்கஜங்கள்
2. கவிஞர்கள்
3. இலக்கிய மேதைகள்
4. போதகர்கள்

35. எட்டு இலக்கிய மேதைகளில் சிறந்த ஆளுமையாளர் _______.

1. தெனாலிராமன் 2 .ஸ்ரீநாதர் 3. பெத்தண்ணா 4. துக்கண்ணா

LIVEWORKSHEETS